| | | |
|---|---|---|
| சாட்சி : PW1<br>சண்முகம்<br>த.பெ. முத்துசாமி | இ.ம.எண்.10/2025 in<br>அ.வ.எண். 292/2015 | 04.06.2025 |

<u>எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை</u>

1) அசல் வழக்கில் என்ன பரிகாரம் கேட்டு தாக்கல் செய்துள்ளேன் என்றால் என்னை கடையை காலி செய்ய சொல்லியதால் அதை எதிர்த்து வழக்கு தாக்கல் செய்துள்ளேன். ஆதியில் இவ்வழக்கை யாருக்கு எதிராக தாக்கல் செய்துள்ளேன் என்றால் முருகானந்தத்திற்கு எதிராக தாக்கல் செய்திருந்தேன். பின்னிட்டு, வனஜா, ரவிச்சந்திரன், ஆறுமுகம் ஆகியோர்களை எதற்காக இவ்வழக்கில் கட்சி சேர்த்துள்ளேன் என்றால் மேற்படி நபர்கள் கடையை காலி செய்ய சொல்லி தொந்தரவு செய்ததால் கட்சி சேர்த்துள்ளேன்.

2) அப்படியானால் வனஜா, ரவிச்சந்திரன், ஆறுமுகம் ஆகியோர் மட்டுமே கடையை காலி செய்ய சொல்லி என்னை தொந்தரவு செய்தனர் என்றால் அவர்களுடன் முருகானந்தமும் சேர்ந்து தொந்தரவு செய்தார். அசல் வழக்கில் தற்கால தடைஉறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி நான் தாக்கல் செய்த மனுவில் பிறப்பித்த ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்ய கோரி எதிர்மனுதாரர் தரப்பில் மனு தாக்கல் செய்திருந்த விபரம் எனக்கு தெரியுமா என்றால் மேற்படி விபரம் எனக்கு தெரியாது.

3) தாவா சொத்தை பொறுத்து வேறு வழக்கு ஏதேனும் வழக்கு நிலுவையில் உள்ளதா என்றாலும், வேறு ஏதேனும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதா என்றாலும் இல்லை.

மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.